


RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE புதன் நவம்பர் 05 * 2025 * மலர் -1 * இதழ்-156 * VOL-1 * ISSUE-156 விலை ரூ.3 * பக்கம் -4

### கோவை கல்லூரி மாணவி கற்பழிப்பு சம்பவம்:

# சுட்டுப்பிடிக்கப்பட்ட 3 பேர் குறித்து திடுக்கிடும் தகவல்!

## ★ ஏற்கனவே கொலை, கொள்ளையில் ஈடுபட்டவர்கள்;

## ★ தற்போது போலீசாரையும் அரிவாளால் வெட்டினர்!!

கோவை, நவ.05–

கோவையில் கல்லூரி மாணவியை கற்பழித்த 3 பேரை போலீசார் சுட்டுப்பிடித்தனர். அவர்கள் போலீசாரைவெட்டிவிட்டுதப்பியபோதுதுப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இந்த 3 குற்றவாளிகளும் ஏற்கனவே கொலை – கொள்ளை வழக்குகளில் ஈடுபட்டவர்கள்.

மதுரையைச் சேர்ந்த 21 வயதான மாணவி ஒருவர் கோவையில் உள்ள கலைக் கல்லூரியில் முதுகலை முதலாம் ஆண்டு படித்து வருகிறார். இவர், அங்குள்ள தனியார் தங்கும் விடுதியில் தங்கி கல்லூரி சென்று வந்துள்ளார். நேற்று முன்தினம் விடுமுறை தினம் என்பதால், இவர் ஒண்டிப்புதூரைச் சேர்ந்த தனது ஆண் நண்பர் வினித் என்பவருடன் காரில் வெளியே சென்றுள்ளார். பின்னர் கோவை விமானநிலையத்தின்பின்புறம்உள்ளபிருந்தாவன் நகர் பகுதியில் காரை நிறுத்தியுள்ளனர்.

இரவு 11 மணியளவில் காரை நிறுத்திவிட்டு இருவரும் பேசிக் கொண்டிருந்ததாகத் கூறப்படுகிறது. அப்போது அங்கு போதையில் வந்த மூன்று பேர், அவர்களை காரிலிருந்து வெளியே வர கூறியுள்ளனர். இதை பார்த்து அதிர்ச்சி அடைந்து பயந்து போன மாணவியும், அவரின் நண்பரும் அங்கிருந்து காரை எடுத்துக் கொண்டு தப்பிச் செல்ல முற்பட்டுள்ளனர்.

தொடர்ந்து மிரட்டிய மர்ம நபர்கள், காரை தடுத்து நிறுத்தி கண்ணாடியை உடைத்துள்ளனர். அச்சத்துடன் வினித் வெளியே வந்ததும் அவரின் தலையில் அரிவாள் மூலம் தாக்கியுள்ளனர். தலையில், பலத்த அடிபட்டதும் வினித் அங்கேயே மயங்கி விழுந்துள்ளார். இதைக் கண்டு மாணவி உயிர் பயத்தில் சத்தம் போட்டுள்ளார்.

உடனே, கத்தி முனையில் மாணவியை மிரட்டி வலுக்கட்டாயமாக புதர் பகுதிக்குள் தூக்கிச் சென்ற மர்ம நபர்கள், கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது. நள்ளிரவு 2 மணியளவில் மயக்கம் தெளிந்த வினித் போலீஸ் கண்ட்ரோல் ரூமுக்கு அழைத்து நடந்ததை கூறியுள்ளார். சம்பவ இடத்திற்கு விரைந்த பீளமேடு போலீசார், அவரை மீட்டு கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் புதர் மண்டிய விமான நிலைய பின் பகுதியில் சுமார் ஒரு மணி நேரம் சல்லடை போட்டு தேடியதில், ஒரு கிலோ மீட்டர் தொலைவில் மாணவி நிர்வாண நிலையில் இருந்ததை கண்டு போலீசார் அதிர்ச்சி அடைந்துள்ளனர். ஆடையின்றி கிடந்த அந்த பெண், அங்கிருந்து வெளியேற முடியாமல் அதிகாலை 4 மணி வரையில் உயிரை கையில் பிடித்துக் கொண்டு இருந்துள்ளார்.

பின்னர், பாதுகாப்பாக அவரை மீட்ட போலீசார் அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இச்சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த பீளமேடு போலீசார், ஏழு தனிப்படைகள் அமைத்து தீவிர விசாரணையில் ஈடுபட்டனர். சம்பவம் நிகழ்ந்த பகுதியின் சுற்றுவட்டாரத்தில் உள்ள சிசிடிவி காட்சிகளைக் கைப்பற்றி தேடுதல் வேட்டையில் இறங்கினர். அப்போது இந்த சம்பவத்தில் ஈடுபட்டது தவசி, கருப்பசாமி, காளீஸ்வரன் ஆகியோர் என்பது தெரிய வந்தது. தொடர்ந்து அவர்களை தனிப்படை போலீசார் தேடி வந்தனர்.

இந்நிலையில், இந்த சம்பவத்தில் ஈடுபட்ட மூவரும் துடியலூர் வெள்ளக்கிணறு பட்டத்தரசி அம்மன் கோவில் அருகே பதுங்கி இருப்பது போலீசாருக்கு தெரியவந்தது. உடனே போலீசார் அங்கு சென்றனர். பதுங்கியிருந்த அவர்களை சுற்றிவளைத்து பிடிக்க முயன்றபோது, மறைத்து வைத்திருந்த அரிவாளால் போலீசார் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது. இதில் காவலர் சந்திரசேகரின் இடது கை மணிக்கட்டில் வெட்டு விழுந்தது.

உடனே மூவரும் அங்கிருந்து தப்பியோட முயன்றுள்ளனர். அப்போது, பீளமேடு போலீஸ் இன்ஸ்பெக்டர் அர்ஜுன் மற்றும் சரவணம்பட்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஞானசேகரன் ஆகியோர் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

தவசிக்கு ஒரு காலிலும், கருப்பசாமி, காளீஸ்வரன் சகோதரர்களுக்கு இரண்டு கால்களிலும் குண்டு பாய்ந்த நிலையில் அங்கேயே சரிந்து விழுந்தனர். குண்டு பாய்ந்து காயமடைந்த அவர்கள் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதனிடையே, பிடிபட்ட மூவரும் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், இருகூர் பகுதியில் வீடு எடுத்து தங்கி வேலை பார்த்து வந்ததும் விசாரணையில் தெரியவந்துள்ளது. இதில் கருப்பசாமி, காளீஸ்வரன் ஆகியோர் சகோதரர்கள் என்பது, மூவர் மீதும் கொலை, வழிப்பறி, அடிதடி என பல்வேறு வழக்குகள் பதிவாகி இருப்பதும் முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த 3 பேர் மீதும் கிணத்துக்கடவு காவல் நிலையத்தில் கொலை வழக்கு நிலுவையில் உள்ளது. துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட இடத்தில் போலீசார் தடயவியல் ஆய்வையும் மேற்கொண்டனர்.

கோவையில் கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை போலீசார் நள்ளிரவு நேரத்தில் சுட்டுப்பிடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




கோவையில்நடந்தகல்லூரிமாணவிகூட்டுபாலியல்பலாத்காரம்சம்பவத்தைகண்டித்து வானதி சீனிவாசன் எம்.எல்.ஏ. தலைமையில் பா.ஜ.க. மகளிர் அணியினர் தீப்பந்தம் ஏற்றி போராட்டம் நடத்தினர்.

### மாணவி கூட்டு பாலியல் பலாத்காரம்:

# பா.ஜனதா மகளிர் அணியினர் தீப்பந்தம் ஏந்தி போராட்டம்!

## வானதி சீனிவாசன் தலைமையில் நடந்தது!!

கோவை, நவ.5

கோவை விமான நிலையத்தின் பின்புறம் தனது காதலனுடன் பேசிக் கொண்டிருந்த கல்லூரி மாணவியை 3 பேர் கொண்ட கும்பல் கடத்தி சென்று கூட்டு பாலியல் பலாத்காரம் செய்தனர். இந்த சம்பவம் கோவை மட்டுமின்றி தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தி உள்ளது. மேலும், அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்த சம்பவத்தை கண்டித்து பா.ஜ.க கோவை மாவட்ட மகளிர் அணி சார்பில் கோவை

தெற்கு தாலுகா அலுவலகம் முன்பு தீப்பந்தி ஏந்தி போராட்டம் நடைபெற்றது. இதற்கு வானதி சீனிவாசன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி பேசும் போது கூறியதாவது,

கோவையில் இது போன்ற சம்பவம் நிகழ்ந்தது இல்லை. 2017ம் ஆண்டு தேசிய அளவில் நடத்திய ஆய்வில் பெண்களுக்கு பாதுகாப்பான நகரமாக கோவை முதலிடம் பிடித்தது. தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. பெண்கள் அனைவரும் சேர்ந்து தி.மு.க. அரசை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். பெண் கள் கைகளில் பெப்பர் ஸ்ப்ரே எடுத்து வரும் பாதுகாப்பற்ற நிலைதான் தற்போது இருக்கிறது என்றார்.

போராட்டத்தில் பங்கேற்ற பெண்கள் தங்களின் பாதுகாப்பை வலியுறுத்தும்வகையில்'பெப்பர் ஸ்பிரே' கொண்டு வந்து இருந்தனர்.

### திருவெண்ணெய்நல்லூர் மங்களாம்பிகை சமேத கிருபாபுரீஸ்வரர் கோயிலில்

# விளக்கு பூஜை செய்ய கோவிலை திறக்காததால் பக்தர்கள், அதிகாரிகள் இடையே வாக்குவாதம்!

## கோயிலுக்கு வெளியே விளக்கு. சுமங்கலி பூஜை செய்தனர்!!



திருவெண்ணெய்நல்லூர், நவ. 5

திருவெண்ணெய்நல்லூர் மங்களாம்பிகை சமேத கிருபாபுரீஸ்வரர் கோயிலில் விளக்கு பூஜை செய்ய அறநிலையத்துறையினர் எதிர்ப்பு கோவிலை திறக்காததால் பக்தர்கள் அதிகாரிகள் இடையே வாக்குவாதம் பரபரப்பு கோயிலுக்கு வெளியே திருவிளக்கு மற்றும் சுமங்கலி பூஜை செய்தனர்.

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூரில் மிகவும் பழமை வாய்ந்த பிரசித்தி பெற்ற மங்காளம்பிகை சமேத கிருபாபுரீஸ்வரர் ஆலயம் உள்ளது. இந்த கோவிலில் உதவும் கரங்கள் அறக்கட்டளை சார்பில் குழுவைச் சேர்ந்த பிரபாகரன் சரவணன் கலியமூர்த்தி மற்றும் பெண்கள் இந்தக் கோவிலில் திருவிளக்கு பூஜை மற்றும் சுமங்கலி பூஜை நடத்த அனுமதி கேட்டிருந்தனர். இந்து சமய அறநிலைத்துறை அதிகாரிகள் கோயில் செயல் அலுவலர் அறிவழகன் அனுமதி வழங்கவில்லை. இந்நிலையில் இன்று மதியம் 2 மணிக்கு கோவில் நுழைவாயில் முன்பு பெண்கள் பக்தர்கள் கூட்டமாக வந்து கோவில் வாயில் முன்பு காத்திருந்தனர். கோவில் திறக்காமல் இருந்ததால் பக்தர்கள் பெண்கள் திருவிளக்கு சுமங்கலி பூஜைக்கான ஏற்பாடுகளை செய்தனர்.

இதனை அறிந்த இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் அறநிலையத்துறை ஆணையர்கள் ரமேஷ், வீரபாண்டியன், கோவில் செயல் அலுவலர் அறிவழகன், திருவெண்ணெய்நல்லூர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அன்பழகன், செந்தில்முருகன் அங்கு வந்து பக்தர்களிடம் பேச்சுவா ர்த்தை நடத்தினர். அப்போது பெண்கள் பக்தர்கள் திருவிளக்கு பூஜை நடத்துவதற்கு கோவிலை திறந்து விடுமாறு கேட்டனர். ஆனால் உங்களுக்கு அனுமதி கிடையாது. பூஜை நடத்துவதற்கு அனுமதி இல்லை. வேண்டுமென்றால் தனிநபராகவோ அல்லது பொது மக்களாகவோ சென்று வழிபாடு செய்யலாம் என கூறினர். இதனால் போலீசார் மற்றும் அதிகாரிகளுக்கு இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த பக்தர்கள் நாங்கள் அறக்கட்டளையை சேர்ந்தவர்கள் அல்ல என்றும் இன்று பிரதோஷத்தை முன்னிட்டு கிருபாபுரீஸ்வரரை வழிபாடு செய்வதற்கு பக்தர்களாக வந்துள்ளோம் என்றும், எனவே கதவை திறக்குமாறு அறநிலை துறை அதிகாரியிடம் வாக்குவாதம் செய்தனர். இதனால் ஆத்திரமடைந்த பக்தர்கள் கோயிலுக்கு வெளியே வாசலில் அமர்ந்து குத்துவிளக்கு ஏற்றி திருவிளக்கு பூஜை சுமங்கலி பூஜைகளை செய்து வழிபாடு செய்தனர். இதனால் கோவிலில் பரபரப்பு ஏற்பட்டது. இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது. அறக்கட்டளை சார்பாக வழிபாடு நடத்துவதற்கு அனுமதி இல்லை என கூறினார். தனித்தனியாக கோவிலில் வழிபாடும் செய்வதற்கு எந்த வித தடையும் இல்லை எனக்கூறி கோவிலை திறந்து வைத்தனர்.

இதனால் இந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

### ராமர் கோவில் பணி பூர்த்தி:

# பிரதமர் நரேந்திர மோடி 25-ஆம் தேதி அயோத்தி பயணம்!

லக்னோ, நவ.5

ராமர் கோவில் முழுமையாக பூர்த்தி அடைந்து விட்டது. இம்மாதம் 25–ஆம் தேதி அயோத்தியில் நடைபெறும் விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொள்கிறார். கொடியேற்ற நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கிறார்.

அயோத்தி ராம ஜென்ம பூமி விவகாரம் பல தலைமுறைகளாக சர்ச்சயை ஏற்படுத்தி வந்தது. இது உச்ச நீதிமன்றத்திற்கு சென்றது. ஜென்ம பூமியில் ராம கோவில் கட்ட உச்சநீதி மன்றம் அனுமதி வழங்கியது. இதையடுத்து அயோத்தி ஜென்ம பூமியில் ராமர் கோவில் கட்டப்பட்டுள்ளது.

பணி முழுமையாக பூர்த்தி அடையாத நிலையிலேயே ராமர் திறந்து வைக்கப்பட்டது. பக்தர்கள் தொடர்ந்து வழிபடு நடத்தி வருகின்றன. இந்நிலையில் எஞ்சிய பணி முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டது.கோவில் முழுமையாக பூர்த்தி அடைந்து விட்டது என்று ஸ்ரீ ராம ஜென்ம பூமி தீர்தத ஷேத்திர அறக்கட்டளையின் பொதுச்செயலாளர் சம்பத் ராய் தெரிவித்துள்ளார். இம் மாதம் 25–ஆம் தேதி பூர்த்தி அடைந்த கோவில் பயன்பாட்டுக்கு வருகிறது. சிவன்,விநாயகர்,அனு மன்,சூரியன், பகவதி, அன்னபூர்னணி ஆகியோருக்கு ஆலயங்களும் ஷேசாவதார கோவிலும் அயோத்தி ராமர் கோவில் வளாகத்தில் எழுப்பபட்டுள்ளன. 25–ஆம் தேதி நடைபெறும் விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொள்கிறார். கொடியேற்ற நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்கிறார்.

### திருப்பூரில் பரபரப்பு:

# கலெக்டர் அலுவலகத்தில் தீக்குளித்து பெண் சாவு!


திருப்பூர்,நவ.05–

திருப்பூர் கலெக்டர் அலுவலக வளாகம், ஞாயிற்றுக்கிழமை விடுமுறை என்பதால் ஆட்கள் நடமாட்டம் குறைவாக காணப்பட்டது. கலெக்டர் அலுவலக வராண்டாவில் காவலர்கள் பாதுகாப்பு பணியில் இருந்தனர். பெண் ஒருவர், கலெக்டர் அலுவலக நுழைவு வாசலில் பஸ்சில் இருந்து இறங்கியவர் நேராக கலெக்டர் அலுவலகத்துக்கு வரும் பாதை வழியாக நடந்து வந்தார். மனு எழுதிக்கொடுக்கும் இடத்துக்கு அருகே வந்தவர், திடீரென்று தான் கொண்டு வந்த கேனில் இருந்த மண்எண்ணையை உடலில் ஊற்றி தீக்குளித்தார். அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் ஓடி வந்து, பெண்ணின் உடலில் பற்றி எரிந்த தீயை அணைத்தார். இதில் அந்த பெண்ணுக்கு படுகாயம் ஏற்பட்டது. உடனடியாக அங்கிருந்தவர்கள், 108 ஆம்புலன்சு வரவழைக்கப்பட்டு அந்த பெண்ணை ஏற்றி திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்குஅனுப்பி வைத்தனர். அங்கு அந்த பெண்ணுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. வீரபாண்டி போலீசார் நடத்திய விசாரணையில் அந்த பெண்உடுமலையைசேர்ந்த, தனியார் பள்ளி ஓவியா ஆசிரியர் பிரபாக ரனின் மனைவி கவுசல்யா(40) என்பதும், இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருப்பதும் தெரியவந்துள்ளது மேலும் கணவன் மனைவி இருவருக்கும் இடையே அடிக்கடி சண்டை நடந்து வந்ததாகவும், இருவருக்குள் தகராறு ஏற்பட்டு கைகலப்பில் முடிந்ததாகவும் கூறப்படு கிறது. இந்த நிலையில் திருப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அந்த பெண் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.




விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் 70 செஞ்சி சட்டமன்ற தொகுதிக்கான சிறப்பு தீவர திருத்தம் பணிக்கான கணக்கீட்டு படிவத்தினை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் வழங்கினார். செஞ்சி வருவாய் வட்டாட்சியர் துறைசெல்வன் உட்பட பலர் உள்ளனர்.

# பெரியசெவலை செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை பருவத்திற்கான இளஞ்சூடேற்று விழா!



திருவெண்ணெய்நல்லூர், நவ.5

திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள பெரிய செவலை செங்கல்ராயன் கூட்டுறவுசர்க்கரைஆலையில் இந்த ஆண்டு கரும்பு அரவை பருவத்திற்கான இளஞ்சூடேற்றுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஆலையின் மேலாண்மை இயக்குனர் முத்துமீனாட்சி தலைமை தாங்கி இணை மின் உற்பத்தி திட்ட கொதிக்கலனில் தீப்பந்தம் மூலம் இளஞ்சுடேற்றுதல் விழாவினை தொடங்கி வைத்து ஆலைக்கு அதிக அளவில் கரும்பு சப்ளை செய்த கோட்டத்திற்கு இரண்டு விவசாயிகளுக்கு முதல் மற்றும் இரண்டாம் பரிசு பொருட்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் தலைமை கரும்பு அலுவலர்வில்லியம்அந்தோணி, கரும்பு அபிவிருத்தி அலுவலர் தாமரைச்செல்வி, துணை தலைமை ரசாயனர் செந்தில்குமார், தலைமை ரசாயனர் பாலசுப்பிரமணியன், அலுவலக மேலாளர் மற்றும் தொழிலாளர் நல அலுவலர் செந்தில்குமார் மற்றும் கரும்பு அலுவலர்கள் கரும்பு உதவியாளர்கள் பணியாளர்கள் விவசாய சங்க பிரிதிநிதிகள்விவசாயிகள்உள்பட பலர் கலந்து கொண்டனர்.



மேற்காசிய நாடான ஐக்கிய அரபு எமிரேட்சின் துபாயில், நடப்பாண்டுக்கான பிரமாண்ட சைக்கிள் போட்டி நடந்தது. உடல் ஆரோக்கியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடந்த இந்த போட்டியில் 40,327 பேர் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

### உறவுகளை இழந்த சோகம்:

## தண்ணீர் கடலுக்கு திரும்புவது போல் தெய்வீகத்துடன் கலப்பதுதான் வாழ்வின் நோக்கம்!

### நடிகை நூபுர் அலங்கார் உருக்கம்!!

மும்பை, நவ.05

உறவுளையும் பணத்தையும் இழந்த சோகத்தில் இமயமலை குகையில் வாழும் டி.வி. நடிகை உருக்கமான பதிவை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறும்போது:–

தண்ணீர் கடலுக்கு திரும்புவது போல் தெய்வீகத்துடன் கலப்பதுதான் வாழ்வின் நோக்கம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியில் பிரபல டி.வி. சீரியல் நடிகையாக திகழ்ந்த நடிகை நூபுர் அலங்கார், ஆன்மீகப் பாதைக்கு திரும்பி இமயமலை குகை, காடுகள் மற்றும் தொலைதூர ஆசிரமங்களில் தங்கி அமைதியான எளிய வாழ்க்கை வாழ்கிறார். இந்தியில் சக்திமான் உட்பட 155–க்கும் மேற்பட்ட டி.வி. சீரியல்களில் நடித்து புகழ் பெற்றவர் நூபுர் அலங்கார். இவர் தனது பணத்தை பி.எம்.சி. வங்கியில் சேமித்து வைத்திருந்தார்.

முறைகேடுகள் காரணமாக இந்த வங்கி வாரியத்தை ரிசர்வ் வங்கி கடந்த 2019ஆம் ஆண்டு கலைத்தது. வாடிக்கையாளர்கள் பணம் எடுக்க கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இது அவருக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தியது.

மேலும் இவரது குடும்பத்தில் சில சோக சம்பவங்கள் நடைபெற்றன. தாய் மற்றும் சகோதரி அடுத்தடுத்து மரணம் அடைந்தனர்.



இதனால் உலக வாழ்க்கையை அவர் வெறுத்தார். குடும்பத்தைவிட்டு ஆன்மீக பாதைக்கு திரும்ப விரும்பினார். குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனுமதியுடன் ஆன்மீக வாழ்க்கைக்கு திரும்பினார். சந்நியாச வாழ்க்கையை தொடங்கி தனது பெயரை பீதாம்பரமா என மாற்றிக் கொண்டார். மும்பையை விட்டு வெளியேறி நாடு முழுவதும் பயணம் செய்தார். சுமார் 3 ஆண்டுகளாக இமயமலை குகை, காடுகள் மற்றும் தொலைதூர ஆசிரமங்களில் அவர் தங்கி தியானம் செய்தார். கடும் பனி, எலி கடி, உடல் நிலை பாதிப்பு போன்ற சிரமங்களையும் அவர் தங்கும் இடங்களில் சந்தித்தார்.

ஆசிரமத்துக்கு வருபவர்கள் அளிக்கும் உடைகளையே அவர் அணிகிறார். தன்னுடன் எப்போதும் 5 செட் உடைகளை மட்டுமே வைத்துக் கொள்கிறார். செலவுக்கு பிறரிடம் யாசகம் பெறுகிறார். அவற்றை கடவுளுக்கும், அவரது குருவுக்கு அளிக்கிறார்.

இது குறித்து அவர் கூறுகையில், '' ஆடம்பரமின்றி வாழ்க்கையை அனுபவிக்க விரும்பினேன். இயற்கையுடன் இணைந்து வாழ்வது மன அமைதியையும், தெளிவையும் கொடுக்கிறது. யாசகம் பெறுவது மூலம் கர்வம் ஒழிந்துள்ளது. தண்ணீர் கடலுக்கு திரும்புவதுபோல், தெய்வீகத்துடன் கலப்பதுதான் வாழ்வின் நோக்கம்'' என்கிறார்.



கடலூர் தேவனாம்பட்டினம் சில்வர் கடற்கரையை புது பொலிவுடன் மேம்படுத்தும் பணியில் மூங்கில் கூரைகள் அமைக்கப்பட்டுள்ளது.

### கல்லறை திரு நாளை முன்னிட்டு:

## திண்டுக்கல்லில் பூக்களின் விலை பல மடங்கு உயர்வு!

### மல்லிகை கிலோ ரூ.1300–க்கு விற்பனை!!

திண்டுக்கல், நவ.05

திண்டுக்கல் பேருந்து நிலையம் அருகே மாநகராட்சிக்கு சொந்தமான பேரறிஞர் அண்ணா பூ வணிக வளாகம்.

இங்கு திண்டுக்கல் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பூக்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

மேலும் இங்கிருந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் கேரளா, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கு தினசரி பல டன் பூக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

இதற்கிடையே இன்று இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் கல்லறை திருநாள் கிறிஸ்த வர்களால் அனுசரிக்கப்பட்டு வரும் நிலையில் மாலை கட்டுவதற்கு பயன்படும் செவ்வந்தி சம்பங்கி ரோஸ் ஆகிய பூக்களின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது



கடந்த வாரம் கிலோ ஒன்று ரூபாய் ஐம்பது முதல் 60 க்கு விற்பனையான செவ்வந்தி 200க்கும் ரூபாய் 100 க்கு விற்பனையான சம்பங்கி 300க்கும் 70 முதல் 80 க்கு விற்பனையான ரோஸ் 250க்கும் இன்று விற்பனையாகி வருகிறது.

பூக்களின் வரத்து போதிய அளவில் இருந்த போதிலும் தேவை அதிகரித்த காரணத்தினால் மாலை கட்டுவதற்கு பயன்படுத்தப்படும் பூக்கள் விலை பல மடங்கு உயர்ந்துள்ளதாக பூ வியாபாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதே போல மல்லிகைப்பூ கிலோ ஒன்று ரூபாய் ஆயிரம் முதல் 1300 வரைவிற்பனையாகி வருகிறது.

முல்லைப் பூ ஒரு கிலோ 800 ரூபாய்க்கும்

கனகாம்பரம் ஒரு கிலோ 700 ரூபாய்க்கும் ஜாதிப்பூ ஒரு கிலோ 500 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

### தமிழக முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில்

## ஆம்புலன்ஸ் சேவை துவக்க விழா!

### திண்டுக்கல்லில் நடந்தது!!

திண்டுக்கல்,நவ.5

திண்டுக்கல்லில் தமிழ் நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் சார்பில் அனைத்து பொதுமக்களுக்காக ஆம்புலன்ஸ் அர்ப்பணிப்பு நிகழ்ச்சி பேகம்பூரில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, மாவட்ட தலைவர் ஷேக் பரீத் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் யாசர் அரபத் வரவேற்புரை ஆற்றினர். மாநில செயற்குழு உறுப்பினர் நஜிபுர் ரஹ்மான், கிழக்கு மாவட்ட துணை செயலாளர் சுகைல், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் முகமது ரியாஸ் மண்டல செயலாளர் சாகுல் ஹமீத் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திண்டுக்கல் தி.மு.க. பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில் குமார் புதிய ஆம்புலன்ஸ் சேவையை துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், திண்டுக்கல் மேயர் இளமதி, மனிதநேய மக்கள் கட்சி மாநில பொதுச்செயலாளர் அப்துல்சமது, மாநில செயலாளர் பார்க் அப்துல்லா, தி.மு.க. மாவட்ட துணை செயலாளர் பிலால் உசேன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் எம்.எல்.ஏ. பாலபாரதி, காங்கிரஸ் மாநகர மாவட்ட தலைவர் மணிகண்டன், திராவிடர் கழக மாவட்ட தலைவர் வீரபாண்டியன் உட்பட பலர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். கிழக்கு மாவட்ட பொருளாளர் அப்துல் அகமது நன்றி கூறினார்.

### ராஜபாளையத்தில்

## 20 ரூபாய் டாக்டர் மறைவிற்கு அமைதி ஊர்வலம்!

### பொதுமக்கள் சார்பில் நடந்தது!!

ராஜபாளையம், நவ.5

ராஜபாளையம் அழகை நகரைச் சேர்ந்தவர் ராஜசேகர் (64). இவர் எம்.பி.பி.எஸ்.,எம்.டி. படித்துவிட்டு அவரது தந்தை நடத்தி வந்த கிளினிக்கில் மருத்துவராக பணியாற்றினார். மருத்துவம் தொடங்கிய காலம் முதல் தற்போது வரை ரூ.20 மட்டுமே மருத்துவ கட்டணமாக பெற்று வந்தார். மாத்திரை, ஊசி உட்பட அனைத்தும் இதில் அடங்கும். இதனால் இவரது கிளினிக்கில் மருத்துவம் பார்ப்பதற்கு பொதுமக்கள் கூட்டம் எப்போதும் இருக்கும். இவர் கடந்த அக்.25ஆம் தேதி நள்ளிரவில் மாரடைப்பால் மரணமடைந்தார். இரங்கல் தெரிவிக்கும் வகையில் ராஜபாளையம் பொதுமக்கள் சார்பில் அமைதி ஊர்வலம் நடந்தது. ஜவஹர் மைதானத்தில் தொடங்கி ரெயில்வே மேம்பாலம் வழியாக டாக்டரின் இல்லத்தில் நிறைவடைந்தது. இதில் நகர் மன்ற தலைவர் பவித்ராஷ்யாம், தமிழ்நாடு சீர்மரபினர் நலவாரியத் துணைத் தலைவர் ராசா அருண்மொழி, முன்னாள் எம்.எம்.ஏ. கோபால்சாமி, பொதுமக்கள் உள்பட அனைத்து கட்சியினரும் பங்கேற்றனர்.

### பதவி உயர்வு – காலி பணியிடங்கள் நிரப்ப கோரி

## போக்குவரத்து ஊழியர்கள் 5-ந் தேதி தற்செயல் விடுப்பு போராட்டம்!

### மதுரையில் நடந்த கூட்டத்தில் முடிவு!!

மதுரை, நவ.5–

பதவி உயர்வு காலி பணியிடங்கள் நிரப்பு கோரி போக்குவரத்து ஊழியர்கள் 5–ந் தேதி தற்செயல் விடுப்பு போராட்டம் நடத்தப்படும் என மதுரையில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு போக்குவரத்து துறை பணியாளர்கள் ஒன்றிப்பு ஆலோசனைக்கூட்டம் மதுரையில் நடந்தது. இந்த கூட்டத்திற்கு அரசு பணியாளர்கள் சங்க சிறப்பு தலைவர் கு. பாலசுப்பிரமணியம் சிறப்பு ரையாற்றினார்.

மாநில தலைவர் விஜயகுருசாமி தலை மை தாங்கினார். மாநில பொருச்செயலாளர் கோபிராஜன், துணை தலைவர் அபுபக்கர் சித்திக், மண்டல செயலாளர் சுரேஷ் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், பதலி உயர்வுகள் மூலம் காலியாக உள்ள உதவியாளர் கண்காணிப்பாளர் மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் நேர்முக உதவியாளர் முதலியோருக்கு உடனடியாக பதவி உயர்வுகள் வழங்க வேண்டும்.

நேர்முக உதவியாளர் நிலையில் இருந்து, வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பதவி உயர்வில் ஏற்கனவே தகுதி வாய்ந்தோர் பட்டியலில் உள்ள நபர்களுக்கு உடனடியாக பதவி உயர்வு வழங்க வேண்டும்.

அரசுக்கு அதிக வருவாய் ஈட்டித்தரும் சோதனை சாவடிகளில் உள்ள காலிப் பணியிடங்கள் உடனடியாக நிரப்பிட வேண்டும்.

பதிவு சான்றுகள், ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் ஏனைய பணிகள் தபால் மூலம் தான் கண்டிப்பாக அனுப்ப வேண்டும் என்று உத்தரவினை செயல்படுத்த பதிவறை எழுத்தர்.126 காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டும்.

வட்டாரப் போக்குவரத்து அலுவலர் பதவிஉயர்வுக்கு 4:1 என்ற விகிதத்தில் தயாரிக்கும் தகுதிவாய்ந்தோர் பட்டியலானது அமை ச்சுப் பணியா ளர்களுக்கு தனியாகவும், தொழில்நுட்ப பணியாளர்களுக்கு தனியாகவும் தயாரிக்கப்பட வேண்டும் ஏற்கனவே வெளியிடப்பட்ட தகுதிவாய்தோர் பட்டியலிலில் நிரபப் படாமல் உள்ள அமைச்சுப்பணியார்களுக்கான வட்டார போக்குவரத்து அலுவலர் பணியிடங்கள் அனைத்தும் அமைச்சு ப்பணியாளார்களால் நிரப்பபட வேண்டும்.

இதனை வலியுறுத்தி வருகிற 5–ந் தேதி தற்செயல் விடுப்பு போராட்டம் நடத்தப்படும் என தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது.

### வேடசந்தூர் அருகே

## பஸ் ஸ்டாப்பில் மது விற்றவர் கைது!

### 26 மது பாட்டில்கள் பறிமுதல்!!

வேடசந்தூர், நவ.5

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் போலீஸ் சப்–இன்ஸ்பெக்டர் பாலசுப்பிரமணியன் தலைமையில் போலீசார் திண்டுக்கல் கரூர் நான்கு வழிச்சாலையில் வேடசந்தூர் அருகே உள்ள லட்சுமணன்பட்டி நால்ரோடு பஸ் ஸ்டாப் பேருந்து அருகே அரசு அனுமதி இன்றி சட்டவிரோதமாக மதுபானம் விற்ற சேடபட்டியைச் சேர்ந்த ஜான் (வயது 51) என்பவரை பிடித்து செய்து அவர் விற்பனை க்காக வைத்திருந்த 26 மது பாட்டில்கள் பறிமுதல் செய்து வழக்குப்பதிவு செய்து பிடிபட்ட ஜானை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்.



## ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு!

பென்னாகரம், நவ.5

ஒகேனக்கல் சுற்றுலா தளத்தில்குவிந்தசுற்றுலாப் பயணிகள் பரிசல் சவாரி செய்து இயற்கை அழகை ரசித்தும் அருவிகளில் குளித்து மகிழ்கின்றனர். தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அடுத்த ஒகேனக்கல் சுற்றுலா தளத்தில் விடுமுறை நாட்களிலும் வார விடுமுறை நாட்களிலும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருவது வழக்கம்.

இந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறைநாள்என்பதால் ஒகேனக்கல் சுற்றுலா தளத்தில் அதிக அளவில் சுற்றுலா பயணிகள் வருகை புரிந்தனர். இங்கு வரும் சுற்றுலா பயணிகள் பரிசல் சவாரி மூலம் பாறைகளுக்கு நடுவே இயற்கையாக கொட்டும் மெயின் அருவி , ஐந்தருவி, ஐவர் பானி, உள்ளிட்ட அருவிகளை கண்டு ரசித்து ஆயில் மசாஜ் செய்து கொண்டு மெயின் அருவி, சினி அருவி, மற்றும் ஆற்றுப்பகுதிகளில் குளித்தும் மகிழ்ந்தனர்.

### பீகார் தேர்தல்

## வன்முறைக்கு இடமில்லாமல் அமைதியாக நடைபெறும்!

### தலைமைத் தேர்தல் ஆணையர் உறுதி!!

பாட்னா, நவ.5

'பீகார் மாநில சட்டப்பேரவைத் தேர்தல், வன்முறைக்கு இடமில்லாமல் அமைதியாகவும், வெளிப்படையான முறையிலும் நடைபெறும்' என்று இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தெரிவித்தார்.

பீகார்தலைநகர்பாட்னாவின் புகரான மொகாமா தொகுதியில் தேர்தல் பிரசாரத்தின் போது நடந்த கொலை சம்பவம் மற்றும் அதைத் தொடர்ந்த வன்முறையை அடுத்து தேர்தல் ஆணையம் ஒழுங்கு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. சம்பவத்தைத் தொடர்ந்து பாட்னா ஊரக காவல் கண்காணிப்பாளர் பணியிடமாற்றம் செய்யப்பட்டார். மேலும் மூன்று அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில், உத்தரப்பிரதேச மாநிலம், கான்பூரில் செய்தியாளர்களைச் சந்தித்த தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் கூறியதாவது,

'தேர்தல் ஆணையத்தைப் பொறுத்தவரை, ஆளுங்கட்சி அல்லது எதிர்க்கட்சி என்று யாரும் இல்லை; அனைவரும் எங்களுக்குச் சமமானவர்கள். தேர்தல் நேரத்தில் எந்தவிதமான வன்முறையையும் தேர்தல் ஆணையம் துளியும் சகித்துக் கொள்ளாது. பீகார் தேர்தல், சட்டம் ஒழுங்கின் கீழ் முழுமையான அமைதியுடனும், வெளிப்படைத் தன்மையுடனும் நடத்தப்படும்.

அனைத்து வாக்காளர்களுக்கும் ஜனநாயகத் திருவிழாவில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படும். பீகார் தேர்தல் முழு உலகுக்கும் முன்மாதிரியாக அமையும்.

243 தொகுதி தேர்தல் அதிகாரிகள், சம எண்ணிக்கையிலான பார்வையாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் செலவினப் பார்வையாளர்கள் என அனைவரும் தயார் நிலையில் உள்ளனர். வாக்காளர்கள் அனைவரும் ஜனநாயக செயல்பாட்டில் ஆர்வத்துடன் பங்கேற்று, தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த முன்வர வேண்டும்'.

இவ்வாறு அவர் கூறினார்.

### எடப்பாடி ஆட்சியில் 150 விருதுகளை பெற்றது:

## தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சி ஊழல் ஆட்சியாக மாறிவிட்டது!

### டாக்டர் சரவணன் குற்றச்சாட்டு!!

மதுரை .நவ.5

அதிமுக மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

இந்தியாவிற்கே வழிகாட்டும் திராவிட மாடல் ஆட்சி என்று ஸ்டாலின் தனக்குத்தானே பெருமையாக பேசுகிறார் உண்மைதான்தமிழகம் இன்றைக்கு ஊழல் செய்வதில் இந்தியாவிற்கே வழிகாட்டி வருகிறது.

அமைச்சர் நேரு வகித்து வரும் உள்ளாட்சித் துறையில் 5000 கோடியில் சென்னையில் மழை நீர் வடிகால் பணிகளை செய்துள்ளோம் இதனால் ஒரு சொட்டு நீர் கூட தேங்காது என்று சொன்னார்கள் .ஆனால் ஒரு மழைக்கே சென்னை தத்தளிக்கிறது இதில் மாபெரும் முறைகேடு நடந்துள்ளது என்று மத்திய நிதி அமைச்சர் பகிரங்கமாக குற்றம் சாட்டினார். அதே போல மதுரை மாநகராட்சியில் 250 கோடி அளவில் வரி முறைகேடு மட்டுமல்ல மழைக்காலங்களில் பிலிச்சிங் பவுடர் போடுவதற்கு பதிலாக மைதாமாவு போட்டு அதில் ஊழல் செய்தார்கள். தூய்மை பணியாளர்கள் ஒப்பந்தம் முறையில் முறைகேடு நடைபெற்று வருகிறது.

தற்போது உள்ளாட்சித் துறையில் 2,538 பணியாளர்கள் நியமனத்தில் மிகப் பெரிய ராக்கெட் வேகத்தில் ஊழல் நடைபெற்றுள்ளது . ஒரு கோடியே 30 லட்சம் பேர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலைக்காக அலைந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கு பணத்துக்கு தான் வேலை படிப்புக்கு வேலை இல்லை என்பதை தி.மு.க. அரசு உருவாக்கி உள்ளது.

அமலாக்குத்துறை தமிழக டி.ஜி.பி.க்கு 252 பக்கங்கள் கொண்ட ஒரு அதிர்ச்சியான கடிதங்களை அனுப்பி உள்ளது

அதில் அமைச்சர் நேருவின் சகோதரர் ரவிச்சந்திரன் 30 கோடி வங்கிகடன் மோசடி தொடர்பாக சிபிஐ வழக்கு பதிவு செய்து. சென்னை, திருச்சி, கோவை ஆகிய இடங்களில் சோதனை செய்துள்ளது. இதில் பல்வேறு டிஜிட்டல் ஆவணங்களை கைப்பற்றி விசாரணை செய்த போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறையில் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் தேர்வு செய்ய பணிக்கு ஏற்றார் போல் 25 லட்சம் ,35 லட்சம் வசூல் செய்து ஏறத்தாழ 800 கோடி அளவில் ஊழல் நடந்திருப்பதாக கூறியுள்ளது.

இப்படி அனைத்து துறைகளிலும் ஊழல் நிறைந்த ஆட்சியாக ஸ்டாலின் அரசு உள்ளது.

எடப்பாடி ஆட்சியில் 150 விருதுகளைப் பெற்றது உள்ளாட்சி.ஆனால் திமுக ஊழல் ஆட்சியாக மாறிவிட்டது என்று கூறியுள்ளார்.



அம்பை ஒன்றியம், வாகைக்குளம் பகுதியில் 24–வது சுற்றில் 1500 பனை விதைகள் நடப்பட்டது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



# வாணியம்பாடியில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான கிராத் ஒப்புவிப்புப் போட்டி!

வாணியம்பாடி, நவ.5

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில் ஆஷிகான இலாஹி வரசூல் குழுவின் சார்பில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு கிராத் ஒப்புவிப்புப் போட்டி பாஷீராபாத் பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திருப்பத்தூர் மாவட்ட காஜி ஹாபிஸ் சையத் அப்துர் ரஹ்மான் தலைமை வகித்தார். சையத் ஜமால் பாஷா, வி.எம். ஷஃபீ ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஹாபிஸ் நிசார் அஹமத் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் பெங்களூரை சேர்ந்த ரிஸ்வான் பேக் சம்ஷி தொகுத்து வழங்கினார்.

இதில் ஜெய்பூர், பெங்களூரு, முராதாபாத், ஹைதராபாத் ஆகிய மாநிலங்களில் இருந்தும், ஆம்பூர், பேர்ணாம்பட்டு, குடியாத்தம், வேலூர், மேல் விஷாரம், நீலகிரி, சென்னை ஆகிய மாவட்டங்கள் மற்றும் ஊர்களில் இருந்தும், வாணியம்பாடி தாருல் ஹுப்பாஸ், யாஹியா உல் உலூம் அரபிக் பள்ளி, மாதீனுல் உலூம் அரபிக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு கிராத் மற்றும் நாத் ஒப்புவிப்புப் போட்டியில் கலந்து கொண்டனர். இதில் சிறந்த நாத் மற்றும் கிராத் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கேடையங்கள் வழங்கி வாழ்த்தினர். நிகழ்ச்சியில் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் வி.பாரூக் அஹமத் நன்றி கூறினார்.

# தமிழகத்தில் வலதுசாரி அரசியலுக்கும், பிற்போக்கு சக்திகளுக்கும் இடமில்லை!

## விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர்!!

தர்மபுரி, நவ.5

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன் அவர்கள் தெரிவித்ததாவது:

"தர்மபுரி நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வெற்றியைக் காட்டிலும், வரவிருக்கும் சட்டமன்ற பொதுத்தேர்தலில்வெற்றி பெறுவது தான் மிக முக்கியம்.

தமிழகம் முழுவதும் திமுக வெற்றி பெறுவதற்காக விசிக தயாராக உள்ளது. திமுகவின் வேகத்திற்கு இணைந்து நாங்களும் செயல்பட்டு, மீண்டும் முதல்வராக மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்க பாடுபடுவோம்," என்றார். "அதிமுகபோன்ற கட்சிகள்

தற்போது பாஜகவுடன் இணைந்து, தமிழ்நாட்டை எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா போன்ற தலைவர்களின் கொள்கைகளுக்கு எதிராக செயல்படுகின்றன," என்றார்.

"திராவிட மாடல், பெரியார், அண்ணா மற்றும் கலைஞர் மாடல் அரசே வெற்றி பெற வேண்டும். தமிழ்நாட்டில் நமது கூட்டணியே வெற்றி பெறும்," என்றார்." தமிழகத்தில் வலதுசாரி அரசியலுக்கும் பிற்போக்கு சக்திகளுக்கும் இடமில்லை," என்றும் அவர் வலியுறுத்தினார்.



வாணியம்பாடி அருகே

# மேல்குப்பம் ஊராட்சியில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு கிராம சபா கூட்டம்!

வாணியம்பாடி, நவ.5

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த மேல்குப்பம் ஊராட்சியில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு கிராம சபா கூட்டம் கந்தன் வட்டம் பகுதியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஊராட்சிமன்ற தலைவர் கே.காந்திமதி குமார் தலைமை வகித்தார். துணைத்தலைவர் எஸ். நர்மதா சுகந்தர் மற்றும் ஊராட்சிமன்ற உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர்.

இதில் மாதனூர் வட்டார வளர்ச்சி அலுவலக பொறியாளர் கார்த்திக் கலந்து கொண்டு பொதுமக்களிடம் குறைகள் கேட்டறிந்து கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக பதிலளித்தார். இதனை தொடர்ந்து 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி பணியாளர்கள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் ஊராட்சி செயலாளர் கே.செல்வராணி நன்றி கூறினார்.



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தாராபுரம், பஞ்சப்பட்டி, பிரக்ருதி பப்ளிக் ஸ்கூலில் நடைபெற்ற தாராபுரம் தாலூகா சதுரங்க சங்கம் நடத்திய மாவட்டம் தழுவிய ஐந்தாம் ஆண்டு சதுரங்கப் போட்டி விழாவினை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தொடங்கி வைத்தாரகள். உடன் தாராபுரம் நகர் மன்ற தலைவர் கு.பாப்புக்கண்ணன், சதுரங்க போட்டி சங்க நிர்வாகி.

தருமபுரி திமுக நாடாளுமன்ற உறுப்பினர் இல்ல திருமண விழா:

# தமிழக முதல்வர் கலந்துகொண்டு மங்கள நானை எடுத்து கொடுத்து திருமணத்தை நடத்தி வாழ்த்தினார்!

தருமபுரி, நவ.5

தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி தம்பதியினரின் மகன் பிரகதீஸ்வரன் மணமகள் மது பிரதிக்ஷா ஆகியோரின் திருமணம் இன்று பென்னாகரம் சாலையில் உள்ள ஜோதி மஹாலில் தமிழக முதல்வர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் தருமபுரி வருகை தந்தார்.

அவருக்கு திருமண வீட்டார், அமைச்சர்கள், தொண்டர்கள் வரவேற்பு அளித்தனர் அதனை தொடர்ந்து தமிழக முதல்வர் முக ஸ்டாலின் மணமக்கள் பிரதீஸ்வரன். மது பிரதிக்ஷாவின் திருமணத்தை மங்கள நானை எடுத்து கொடுத்து திருமணத்தை நடத்தி வைத்தும் வாழ்த்தினார். அனைவரையும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினரரும், கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி தம்பதியினர் அரவைவரையும் வரவேற்றார்

இத்திருமண விழாவில் அமைச்சர்கள் MRK பன்னீர் செல்வம், ஏ.வா.வேலூ K.N.நேரு, ராஜேந்திரன் உள்ளிட்ட அமைச்சர்கள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்

அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாகத்துறை சார்பில் தருமபுரி பென்னாகரம் சாலையில் ரூபாய் 40 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் தருமபுரி புறநகர் பேருந்து நிலையம் மற்றும் தடங்கம் அருகே புதிதாக அமைய இருக்கும் சிப்காட் தொழிற்பூங்காவையும் தமிழக முதல்வர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் தருமபுரி மாவட்ட ஆட்சியர் சதிஷ் மற்றும் அமைச்சர்கள் அரசு துறை அதிகாரிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.



# 25 வருடங்களாக உள்ள தார் சாலையை 2 குடும்பங்கள் ஆக்கிரமிப்பு!

## சாலையை மீட்டு தர கலெக்டர் அலுவலகத்தில் மனு!!

திருப்பத்தூர் நவ.5

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த மூக்கனூர் ஊராட்சி தாயப்பன் வட்டம் பகுதியில் சுமார் 70க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இவர்கள் சுமார் 25 வருடங்களாக அப்பகுதியில் தார் சாலையை உபயோகித்து வந்தனர் இந்த நிலையில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பாக தார்ச்சாலை அமைக்கும் பழுது பார்ப்பு பணி தொடங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள இரண்டு குடும்பத்தினர் சாலையை சேதப்படுத்தி குழி நோண்டி முள்ளு செடிகளை போட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளனர்.

இதன் காரணமாக அப்பகுதி மக்கள் வழியாக செல்ல மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் அவளியாக பயணித்தால் அந்த இரண்டு குடும்பத்தினரும் ஆபாச வார்த்தைகளால் பேசுவதாகவும் அப்பகுதி மக்கள் ஆதங்கப்படுகின்றனர். எனவே அவர்களிடமிருந்து சாலையை மீட்டு தர வேண்டும் எனவும் மேலும் சாலையை சீர்படுத்தி தர வேண்டும் எனவும் சுமார் 20க்கும் மேற்பட்டோர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற மக்கள் குறை தீர்ப்பு கூட்டத்தில் மனு அளித்தனர்.

# ராமர் கோவில் பணி பூர்த்தி:

## பிரதமர் நரேந்திர மோடி 25- ஆம் தேதி அயோத்தி பயணம்!

## கொடியேற்ற நிகழ்ச்சியில் பங்கேற்பு!!

லக்னோ, நவ.5

ராமர்கோவில் முழுமையாக பூர்த்தி அடைந்து விட்டது. இம்மாதம் 25–ஆம் தேதி அயோத்தியில் நடைபெறும் விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்கிறார். கொடியேற்ற நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கிறார்.

அயோத்தி ராம ஜென்ம பூமி விவகாரம் பல தலைமுறைகளாக சர்ச்சயை ஏற்படுத்தி வந்தது. இது உச்ச நீதிமன்றத்திற்கு சென்றது.

ஜென்ம பூமியில் ராம கோவில் கட்ட உச்சநீதி மன்றம் அனுமதி வழங்கியது. இதையடுத்து அயோத்தி ஜென்ம பூமியில் ராமர் கோவில் கட்டப்பட்டுள்ளது.

பணி முழுமையாக பூர்த்தி அடையாத நிலையிலேயே ராமர் திறந்து வைக்கப்பட்டது. பக்தர்கள் தொடர்ந்து வழிபடு நடத்தி வருகின்றன. இந்நிலையில் எஞ்சிய பணி முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டது. கோவில் முழுமையாக பூர்த்தி அடைந்து விட்டது என்று ஸ்ரீ ராம ஜென்ம பூமி தீர்தத ஷேத்திர அறக்கட்டனையின் பொதுச்செயலாளர் சம்பத் ராய் தெரிவித்துள்ளார். இம் மாதம் 25–ஆம் தேதி பூர்த்தி அடைந்த கோவில் பயன்பாட்டுக்கு வருகிறது. சிவன், விநாயகர், அனுமன், சூரியன், பகவதி, அன்னபூர்னணி ஆகியோருக்கு ஆலயங்களும் ஷோசாவதார கோவிலும் அயோத்தி ராமர் கோவில் வளாகத்தில் எழுப்பபட்டுள்ளன.

25–ஆம் தேதி நடைபெறும் விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொள்கிறார். கொடியேற்ற நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்கிறார்.



அரசம்பட்டி முத்தமிழ் அரசு மேல்நிலைப் பள்ளியில்

# மட்டைப்பந்து பேட்டியில் +1 மாணவி தேஜஸ் ஸ்ரீ தேசிய அளவில் தேர்வு!

போச்சம்பள்ளி,நவ.5

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த அரசம்பட்டி முத்தமிழ் அரசு மேல்நிலைப் பள்ளி தமிழ்நாடு அளவில் நடைபெற்ற எஸ் ஜி எஃப் ஐ மட்டைப்பந்து தெறிவு போட்டி விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்றது

இப் போட்டியில் பள்ளியின் தேஜஸ் ஸ்ரீ XI என்கின்ற மாணவி பங்கெடுத்து தேசிய அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றார் மாணவியை பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் இருபால் ஆசிரியர்கள் வாழ்த்தி பாராட்டினார்கள் பள்ளியின் உடற்கல்விஆசிரியர்பார்த்திபன் மற்றும் இளையபல்லவன் உள்ளிட்ட ஆசிரியர்கள் நன்றி பாராட்டினார்கள் இதற்கு உறுதுணையாக இருந்த கிரிக்கெட் கோச் அரவிந்த் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

வாணியம்பாடி அருகே

# ஜாப்ராபாத் ஊராட்சியில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு கிராம சபா கூட்டம்!

வாணியம்பாடி, நவ.5

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த ஜாப்ராபாத் ஊராட்சியில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு கிராம சபா கூட்டம் மேல் பத்தாப்பேட்டை பெருமாள் கோயில் முன்பாக நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் ஏ.எம். அமீர் பாஷா தலைமை வகித்தார். துணைத்தலைவர் கே. கொகிலா காளிதாஸ் மற்றும் ஊராட்சிமன்ற உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர்.

இதில் வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேஷ் கலந்து கொண்டு பொதுமக்களிடம் குறைகள் கேட்டறிந்து கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாக பதிலளித்தார்.

இதனை தொடர்ந்து 16 தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் தூய்மை பணியாளர்கள் மற்றும் தூய்மை காவலர்கள் என 18 பேருக்கு ஊராட்சி மன்ற தலைவர் அமீர் பாஷா சால்வை அணிவித்து கௌரவித்தார்.

கூட்டத்தில் மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி பணியாளர்கள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் ஊராட்சி செயலாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

# திருவெண்ணெய்நல்லூர் கலை, அறிவியல் கல்லூரியில் கல்லூரி கலை திருவிழா!

## வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்!!



திருவெண்ணெய்நல்லூர், நவ.5

திருவெண்ணெய்நல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2வாரம் நடைபெற்ற கல்லூரிக் கலை திருவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் இந்திரா தலைமை தாங்கினார். கல்லூரி துணை முதல்வர் நாகலட்சுமி, துறைதலைவர்கள் பாலகுமார், சண்முகசுந்தரம், விஜயகுமாரி ஆகியோர் முன்னிலை வகித்தார். ஆங்கிலத்துறை உதவி பேராசிரியரும் கல்லூரி கலைத் திருவிழா முதன்மை ஒருங்கிணைப்பு அலுவலர் தயாளமூர்த்தி வரவேற்றார். ஆங்கிலத்துறை பேராசிரியர் அருண் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

மனக்குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் கௌரி கோவிந்தராஜுலு வாழ்த்துரை வழங்கினார். விழாவில் திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம்கணேசன் கலந்து கொண்டு கல்லூரி கலைத் திருவிழாவில் சிலம்பம், நடனம், குழு நடனம், பறைஇசை, பாடல்போட்டிஉள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசு பொருட்களை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் கல்லூரி பேராசிரியர்கள்விரிவுரையாளர்கள் பணியாளர்கள் மாணவ மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கர்நாடகாவில்

# அரசு நிகழ்ச்சிகளில் பிளாஸ்டிக் பாட்டில்களுக்கு தடை!

## முதல்வர் சித்தராமையா அதிரடி உத்தரவு

பெங்களூர், நவ.5

கர்நாடகாவில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை அமலில் இருந்தாலும், பல அரசு நிகழ்ச்சிகள் மற்றும் அரசியல் கூட்டங்களில் குடிநீருக்காக பிளாஸ்டிக் பாட்டில்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்தன. இந்த நிலையில் இனி அரசு அலுவலகங்களில் நடைபெறும் கூட்டங்கள்மற்றும்அனைத்து அதிகாரப்பூர்வ நிகழ்ச்சிகளிலும் பிளாஸ்டிக்தண்ணீர்பாட்டில்கள் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அரசுநிகழ்ச்சிகளில் கர்நாடக பால் கூட்டமைப்பின் 'நந்தினி' தயாரிப்புகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து சித்தராமையா எக்ஸ் தளத்தில் கூறியுள்ளதாவது:–

அரசு அலுவலகங்களில்நடக்கும்கூட்டங்கள் மற்றும் அதிகாரப்பூர்வ நிகழ்வுகளில் பிளாஸ்டிக் குடிநீர் பாட்டில்களுக்குப் பதிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

இது தொடர்பாக முன்பே அறிவுரைகள் வழங்கப்பட்டும் யாரும் பின்பற்றவில்லை. இனி மேல் இந்தக் கட்டுப்பாடு கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஆம்பூர் அருகே

# வழி தவறி விவசாய நிலத்திற்குள் வந்த 4 வயது ஆண் புள்ளி மானை நாய்கள் கடித்ததில் உயிரிழப்பு!



வாணியம்பாடி, நவ.5

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த சின்னவரிகம் பகுதியை சேர்ந்த சீனிவாச பெருமாள். இவருக்கு சொந்தமான விவசாய நிலத்திற்குள் காப்பு காட்டிலிருந்து வழி தவறி வந்த 4 வயது ஆண் புள்ளி மானை நாய்கள் துரத்தி கடித்ததில் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிர் இழந்துள்ளது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற ஆம்பூர் வன அலுவலர் பாபு தலைமையிலான வனத்துறையினர் உயிரிழந்த மானை மீட்டுகரும்பூர் பகுதியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

சம்பவம் குறித்து வனத்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### நல்லம்பள்ளி அருகே

# காப்பகத்தில் இருந்த 3 குழந்தைகள் மாயம்!

## பங்களாதேஷை சேர்ந்தவர்கள்!!

**நல்லம்பள்ளி,நவ.5–**

தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளி அடுத்துள்ள வெள்ளைக்கல் குறிஞ்சி நகர் பகுதியில் உள்ளது வள்ளலார் காப்பகம். இந்த காப்பாகத்தில் ஆதரவற்ற பெண்கள், குழந்தைகள்மற்றும் விசாரணைக்குஉட்பட்ட பெண்களையும் அரசு உதவியுடன் காப்பகத்தில் சேர்ப்பது வழக்கம். அதேபோன்று கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் பகுதியில் சட்டவிரோதமாக பங்களாதேஷ் நாட்டை சேர்ந்த மூன்று சிறுமிகள் இருந்து வந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட குழந்தைகள் நலக்குழு வழக்குபதிவு செய்து, தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி அருகே வள்ளலார் காப்பகத்தில் 3 மாதங்களுக்கு முன்பு 3 சிறுமிகளை சேர்த்துள்ளனர்.

இந்த நிலையில் 3 சிறுமிகளும் நேற்று முன்தினம் இரவு காப்பகத்தில் இருந்து மாயமாகியுள்ளனர். சிறுமிகள் மாயமான விவகாரம் குறித்து காப்பக பொறுப்பாளர் செந்தாமரை(65) போலீசில் கொடுத்த அவர்கள் புகாரின் பேரில், தொப்பூர் போலீசார் வழக்குபதிவு செய்து மாயமான 3 சிறுமிகளை தேடி வருகின்றனர்.

### சிறுமி பாலியல் வன்கொடுமை:

# போக்சோவில் உறவினர் கைது!

**மேட்டுப்பாளையம்,நவ.5**



சிறுமுகையை சேர்ந்த 14 வயது சிறுமியை தாத்தா முறை கொண்ட உறவினர் பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து கடந்த மார்ச் மாதம் பக்கத்து வீட்டுப்பெண் சைல்ட் ஹெல்ப் லைன் எண் 1098 க்கு டயல் செய்துபுகாரளித்தார். புகாரின் பேரில் சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்ட சிறுமுகை போலீசார் சிறுமிக்கு தாத்தா முறை உறவினரான முதியவர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து தேடி வந்தனர். இந்நிலையில் தலைமறைவாக இருந்த அவர் 7 மாதங்களுக்கு பின்னர் நேற்று கைது செய்யப்பட்டார். தொடர்ந்து சிறுமுகை போலீசார் அவரை கோவை போக்சோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



ஈரோடு ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்த அனைத்துத்துறை அலுவலர்களுடனான கூட்டம் அமைச்சர் முத்துசாமி தலைமையில் நடந்தது. இதில் கலெக்டர் கந்தசாமி, வெங்கடாசலம் எம்.எல்.ஏ. மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், சார் ஆட்சியர் சிவானந்தம் மற்றும் பலர் பங்கேற்றனர்.

# திருப்பூர் மாவட்ட இளையோர் கபாடிப்போட்டி!

**திருப்பூர்,நவ.5**

திருப்பூர் மாவட்ட கபாடிக் கழகத்தின் சார்பாக சிறுவர்களுக்கான சேம்பியன்ஷிப் கபாடிப் போட்டி திருப்பூர் மாவட்ட கபாடிக் கழக அலுவலக மைதானத்தில் நடைபெற்றது. மாவட்டத்திலிருந்து பள்ளி, கல்லூரி, பொதுப் பிரிவைச் சார்ந்த 47 சிறுவர்கள் அணிகள் என 600 வீரர்கள்பங்கு பெற்றனர். போட்டிகள் நாக்கவுட் முறையில் 2 மைதானங்களில் செயற்கை தளம் அமைத்து நடத்தப்பட்டது. போட்டி முடிவில் முதல் பரிசாக ரூ.20 ஆயிரம் பணமும் கோப்பையை சண்முகா அகாடமி அணியும், இரண்டாவது பரிசாக ரூ.15 ஆயிரம் பணமும் கோப்பையை டால்பின் திருப்பூர் அணியும் பெற்றன மூன்றாம் பரிசாக தலா ரூ.10 ஆயிரம் பணமும் கோப்பையும், தமிழன் தளவாய்பட்டினம் அணியும், இளம் சிங்கம் வெங்கமேடு அணியும் பெற்றனர்.

அழைப்பாளராக மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுக்குமார் கலந்து கொண்டார். திருப்பூர் மாவட்ட கபாடிக்கழகசேர்மன்கொங்கு வி.கே. முருகேசன் தலைமையில், கௌரவ தலைவர் பி.நாச்சிமுத்து, மாவட்ட தலைவர் ரோலக்ஸ் பி. மனோகரன், மாநில பொருளாளரும், மாவட்ட செயலாளருமான ஜெயசித்ரா ஏ. சண்முகம், பொருளாளர் கன்னிமார்ஸ் ஆறுச்சாமி, துணைத் தலைவர்கள் கொ. ராமதாஸ், ரோலக்ஸ் சுப்பிரமணியம், புரவலர்கள் ரைஸ் பத்மநாபன், பி.ஏ.பி. பழனிச்சாமி, மகாலட்சுமி ரத்தினசாமி, பிரேமா மணி, திவ்யா, ராஜா, செய்தித் தொடர்பாளர் சு. சிவபாலன், துணைச் சேர்மன் எஸ். முருகானந்தம், சன்வின் குமார், செந்தில், துணைச் செயலாளர்கள் செல்வராஜ், மூர்த்தி டிரேடர்ஸ் மனோகர், முன்னாள் கவுன்சிலர் ஆர். தேவராஜ் ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

தேர்வுக்குழு தலைவர்வி.டி. ருத்ரன், கன்வீனர்வாலீசன், காரல் மார்க்ஸ் ரவிச்சந்திரன், மணிகண்டன், தங்கராஜ் ஆகியோர் தலைமையில் சிறந்த

14 விளையாட்டு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். நடுவர்குழு சேர்மன் ஆர்.முத்துசாமி, கன்வீனர் சேகர் ஆகியோர் தலைமையில் 24 நடுவர்கள் பணியாற்றினார். டெக்னிக்கல் கமிட்டி ஆர். ரங்கசாமி, மருதையன் உள்ளிட்ட நடுவர்கள் பங்கேற்றனர்.



திருப்பூர் மாவட்டம் கபடி கழகத்தின் சார்பாக நடந்த சிறுவர்களுக்கான சாம்பியன் சிப் போட்டியில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கு மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுகுமார், சேர்மன் கொங்கு வி.கே. முருகேசன் மற்றும் நிர்வாகிகள் பரிசுகளை வழங்கினர்

### கட்சியில் இருந்து நீக்கப்பட்ட நிலையில்

# தேர்தல் ஆணையத்துக்கு செங்கோட்டையன் கடிதம்!

## எடப்பாடி தலைமையில் உண்மையான அ.தி.மு.க. இல்லை என புகார்!!

**சென்னை, நவ.5–**

அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட செங்கோட்டையன் தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் எடப்பாடி தலைமையிலானது உண்மையான அ.தி.மு.க. இல்லை என்று கூறியிருக்கிறார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிரான மன நிலையில் செங்கோட்டையன் இருந்து வந்தார். இந்த விவகாரம் பல மாதங்களுக்கு முன்னர் வெளிச்சத்துக்கு வந்தது.

ஆகவே இருவரும் நேருக்கு நேர் சந்திப்பதை தவிர்த்தனர். சட்டசபையிலும் செங்கோட்டையன் தனித்துவத்துடன் செயல்படத் தொடங்கினார். இந்நிலையில் கட்சியை விட்டு நீக்கியதில் விதிமுறைகளை கையாளவில்லை என்றும், எடப்பாடி சர்வாதிகாரத்துடன் நடந்துகொண்டார் என்றும் செங்கோட்டையன் கூறினார். ஆகவே நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பேன் என்றும் எச்சரித்தார்.

இந்த நிலையில் தேர்தல் ஆணையத்துக்கு அவர் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் எடப்பாடி தலைமையிலான அ.தி.மு.க. உண்மையானது இல்லை என்றும், கட்சியின் உண்மை நிலையை நிரூபிக்க கால அவகாசம் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தேர்தல் ஆணையத்தில் நிலுவையில் உள்ள இரட்டை இலை தொடர்பான விவகாரத்திலும் விரைவில் விசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

### கிருஷ்ணகிரி அருகே

# கட்ட பஞ்சாயத்து செய்து ராணுவவீரர் ஊரைவிட்டு தள்ளி வைப்பு!

## கலெக்டரிடம் புகார் மனு!!



**கிருஷ்ணகிரி, நவ. 5**

கிருஷ்ணகிரி அருகே கங்கலேரி பனமரத்துப் பள்ளம் கிராமத்தில் கட்ட பஞ்சாயத்து செய்து ராணுவவீரரை குடும்பத்துடன் தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக, பாதிக்கப்பட்டவர்கள் நேற்று கலெக்டர் அலுவலகத்தில்புகாரளித்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் கங்கலேரி பஞ்சாயத்துக்கு பனமரத்துப்பள்ளத்தை சேர்ந்தவர் கோவிந்தராஜ் (43). ராணுவ வீரர். விடுமுறைக்கு ஊருக்கு வந்த அவர், தன் குடும்பத்தினருடன் நேற்று கலெக்டர் அலுவலகத்தில் அளித்த புகார்மனுவில் தெரிவித்திருப்பதாவது: எங்கள் மூதாதையரின் மூன்றரை ஏக்கர் நிலத்தில் எனக்கு கடந்த 30 ஆண்டுகளுக்கு முன், வாய்வழியாக ஒதுக்கப்பட்ட முக்கால் ஏக்கர் நிலம், என் சுவாதீனத்தில் உள்ளது. இந்நிலையில், அதை ஏற்க மறுத்து மீண்டும் பாகப்பிரிவினை செய்ய வேண்டுமென ஒரு தரப்பினர் பிரச்னை செய்து வருகின்றனர். விடுமுறையில் நான் ஊருக்கு வந்தநிலையில் நேற்று முன்தினம் என் மீது கல்வீசி கொலை செய்ய முயன்றனர். இதுகுறித்து ஊர்பெரியவர்கள், போலீசில் முறையிட்டும் பலனில்லை. மேலும் எங்கள் குடும்பத்தை ஓராண்டாக ஊரைவிட்டு ஒதுக்கி வைத்து, எங்கள் வீட்டிற்கு தண்ணீர் கூட வழங்குவதில்லை. ராணுவத்தில் பணிபுரியும் என் குடும்பத்திற்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. ஊரை விட்டு எங்கள் குடும்பத்தை ஒதுக்கி வைத்தவர்கள் மீதும், என் குடும்பத்தினரிடம் தகராறில் ஈடுபட்டவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### புஞ்சை புளியம்பட்டியில்

# லாரி,பைக் மோதி வாலிபர் பலி!

**புளியம்பட்டி,நவ.5**

ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டியில் இருந்து சத்தியமங்கலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் புளியம்பட்டி அருணாச்சலம் மருத்துவமனை அருகே சக்தியிலிருந்து

புளியம்பட்டி வழியாக திருப்பூர் நோக்கி சர்க்கரை லோடு ஏற்றி வந்த லாரியும், புளியம்பட்டி மார்டன் பேக்கரியில் வேலை செய்து வந்த பாசில் என்பவர் அவருடைய நண்பரை புளியம்பட்டி பேருந்து நிலையத்தில் இறக்கி விட்டு விட்டு திரும்ப மாடர்ன் பேக்கரிக்கு இருசக்கர வாகனத்தில் அருணாச்சலம் மருத்துவமனை அருகே இன்று காலை 04.00 மணிக்கு சென்று கொண்டிருந்த போது மோதி விபத்து ஏற்பட்டு இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த கேரளாவைச் சார்ந்த பாசில் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். பிரேதம் சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையில்வைக்கப்பட்டுள்ளது விபத்து குறித்து புளியம்பட்டி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### சாலை வசதி கேட்டு

# மருத்தாண்டப்பள்ளி கிராம மக்கள் கலெக்டரிடம் மனு!

**கிருஷ்ணகிரி, நவ.5**



சாலை வசதி கேட்டு, மருத்தாண்டப்பள்ளி கிராமமக்கள் கலெக்டரிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி வட்டம் மருதாண்டபள்ளி கிராம மக்கள், ஓணி புறம்போக்கு நிலத்தை திரும்பப் பெற்றுக் கொண்டு சாலை அமைத்துத்தருமாறு கலெக்டர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.

அம்மனுவில் கூறியிருப்பதாவது: கிருஷ்ணகிரி அணைகட்ட நிலம் கொடுத்தவர்களுக்கு மருத்தாண்டபள்ளியில் இடம் ஒதுக்கினர். 30 குடும்பத்தினர் அங்கு கடந்த 1956ம் ஆண்டு முதல் வசித்து வருகிறோம். சூளகிரியில் இருந்து மருதாண்டப்பள்ளிக்கு 2 கி.மீ., தொலைவு உள்ளது.

எங்கள் கிராமத்திற்கு கடந்த 70 ஆண்டுகளாக பட்டா நிலத்தில் சென்று வந்ததால், கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு நிலத்தின் உரிமையாளர் பாதையை அடைத்துவிட்டார். இதனால் ஒற்றையடி பாதையில் மிகவும் சிரமத்துடன் தினமும் சென்று வருகின்றோம்.

மேலும், விளைப் பொருட்களை எடுத்துச் செல்ல மிகவும் சிரமம் ஏற்பட்டு வருகிறது. எங்களுடன் வசிக்கும் 3 பேருக்கு, நிலமேம்பாட்டு திட்டத்தின் கீழ், கடந்த 1984ம் ஆண்டு 2 ஏக்கர் ஓணி புறம்போக்கு நிலத்திற்கு அரசு பட்டா வழங்கியுள்ளது. அந்த நிலத்தை அரசுக்கே மீண்டும் நாங்கள் வழங்கிவிடுகிறோம். அந்தநிலத்தில் எங்களுக்கு புதிய சாலை அமைத்துத் தர வேண்டும்.

மேலும் 2 ஏக்கர் நிலத்தில் ஒருவர், 13 சென்ட் நிலத்தை வேறு ஒருவருக்கு விற்று விட்டார். அவரது பத்திரப்பதிவை ரத்து செய்து அந்த நிலத்தையும் மீட்டு மொத்த நிலத்திலும் எங்களுக்கு சாலை வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்து ள்ளனர். மேற்பார்வையாளர்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மினி பஸ் மோதி கழுதை குட்டி உயிரிழப்பு:

# இறந்த குட்டியின் உடலை சுற்றி சுற்றி வந்த தாய் கழுதையின் பாசப்போராட்டம்!

## வீடியோ வைரல்!!

**மேட்டுப்பாளையம்,நவ.5**

கோவை, திருப்பூர், நீலகிரி, ஈரோடு மாவட்டங்களின் மைய பகுதியாகவும், தமிழக, கேரள, கர்நாடக மாநில எல்லை பகுதியாகவும் மேட்டுப்பாளையம் இருந்து வருகிறது.



மேலும், மலைகளின் அரசியான நீலகிரி மாவட்டத்திற்கு செல்லும் முக்கிய வழித்தடமாகவும் மேட்டுப்பாளையம் இருந்து வருகிறது. இதனால் நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் மேட்டுப்பாளையம் நகரை கடந்து செல்கின்றன. இந்நிலையில் மேட்டுப்பாளையம் நகரில் இருந்து கோவை, அன்னூர், சத்தி, குன்னூர், கோத்தகிரி செல்லும் சாலைகளில் கடந்த சில ஆண்டுகளாகவே ஆடு, மாடு, கழுதை உள்ளிட்ட கால்நடைகள் சாலைகளிலேயே சுற்றித்திரிந்து வருகின்றன. சிலசமயங்களில் இச்சாலைகளில் பயணிக்கும் வாகன ஓட்டிகள்திடீரெனகுறுக்கே வரும் கால்நடைகளால் விபத்தில் சிக்கி காயமடைந்து வருகின்றனர்.

இதே போல் வாகனங்கள் மோதி கால்நடைகளும் உயிரிழந்து வருகின்றன. இதனால் சாலையில் சுற்றித்திரியும் கால்நடைகளை பிடித்து அதன் உரிமையாளருக்கு உரிய அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்களும், பொதுமக்களும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்நிலையில் நேற்று மேட்டுப்பாளையத்தில் இருந்து மகாதேவபுரம் வழியாக வனபத்ரகாளியம்மன் கோவிலுக்கு இயக்கப்படும் மினி பஸ் அசுர வேகத்தில் சென்றுள்ளது. அப்போது, மகாதேவபுரம் பகுதியில் சாலையில் உலா வந்த கழுதை குட்டி மீது அசுர வேகத்தில் சென்ற மினி பஸ் மோதியதில் குட்டி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியானது. இதனை கண்ட தாய்க் கழுதை குட்டி உயிரிழந்ததை அறியாமல் நீண்ட நேரமாக விபத்தில் அடிபட்டு உயிரிழந்த குட்டி கழுதையின் சடலத்தையே சுற்றி சுற்றி வந்தது. மேலும், குட்டி கழுதையின் அருகிலேயே வேறு வாகனங்கள் ஏதும் சென்று விடாத வண்ணம் காவல் காத்தது. இதனை சமூக ஆர்வலர் ஒருவர் தனது செல்போனில் வீடியோவாக பதிவிட்டு அதனை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளார்.

இந்த வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது. தாய் கழுதையின் இந்த பாசப்போராட்டம் அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்களை கண்கலங்க வைத்தது.

### கல்வராயன் மலையில்

# பழங்குடியினருக்கு பட்டா குறித்து தனி நீதிபதி உத்தரவு ரத்து!

**சென்னை, நவ. 5**

கல்வராயன் மலைப் பகுதியில் விவசாயம் செய்யும் பழங்குடியினருக்கு பட்டா வழங்க வேண் டும் என்ற தனிநீதிபதியின் உத்தரவை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதிகளில் வசித்து வரும் பழங்குடியினர், மலைப்பகுதிகளில் பல ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறோம். தங்களது வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு தங்களுக்கு பட்டா வழங்க வேண்டும் எனக்கூறி, அப்பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணி யன், வேல்முருகன், செல்வராஜ் உள் ளிட்ட பலர் சென்னை உயர்நீதிமன் றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தனர். இந்த வழக்கை விசாரித்த தனிநீதி பதி, மனுதாரர்கள் உள்ளிட்டபலருக்குபட்டா வழங்க வேண்டும் என உத்தரவிட்டிருந்தார். தனி நீதிபதியின் இந்த உத்தரவை எதிர்த்து, தமிழக அரசின் நில நிர்வாக ஆணையர், கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் மற்றும் வனத்துறை சார்பில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மேல்முறையீட்டு மனு நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், முகமது ஷபீக் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அரசுத் தரப்பில் கூடுதல் தலைமை வழக்குரைஞர் ரமன்லால், விவசாயிகள் தரப்பில் வழக்குரைஞர் என்.கவிதா ராமேஸ்வர் ஆஜராகி வாதிட்டனர். வழக்கை விசாரித்த நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், தமிழ்நாடு பட்டா பாஸ் புத்தக சட்டத்தின் கீழ், கல்வராயன் மலைப்பகுதியில் விவசாயம் செய்யும் பழங்குடியினருக்கு நேரடியாக பட்டா வழங்க முடியாது என்பதால், இந்த வழக்கில் தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. அதேநேரம், பழங்குடியினரின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, அவர்கள் தற்போது விவசாயம் செய் யும் பகுதிகளை அதிகாரிகள் ஆய்வு செய்து தகுதியானவர்களுக்குநிபந்தனைகளுடன் கூடிய நில ஒதுக்கீடு பரிந்துரையை அரசுக்கு 6 மாதங்க ளில் அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர்.



திண்டுக்கல் மாநகராட்சிக்கு உட்பட்ட விவேகானந்தர் தெரு பகுதியில் சிறப்பு வாக்காளர் திருத்த படிவங்களை மாவட்ட ஆட்சியர் சரவணன் பொதுமக்களிடம் வழங்கினார். அருகில் கோட்டாட்சியர் திருமலை, மாநகராட்சி ஆணையர் செந்தில் முருகன், மேற்கு வட்டாட்சியர் சுல்தான் சிக்கந்தர் உள்பட பலர் உள்ளனர்.